பக்கங்கள் – 12
விலை – ரூபா 50
Registered as a Newspaper
# உதயன்
சுடர் : 40
கதிர் : 195
செவ்வாய்க்கிழமை
10 ஜூன் 2025
வைகாசி 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056



## டெங்கு பாதிப்பு 25,055!

# தையிட்டி திஸ்ஸ விகாரையில் குவிக்கப்படும் சிங்கள மக்கள்!

### காணி உரிமையாளர்கள் எதிர்த்துப் போர்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாணம் - தையிட்டியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையில் வழிபாட்டு நடவடிக்கைகளுக்காக சிங்கள மக்கள் பலர் ஏற்கனவே குவிக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் நூற்றுக்கணக்கானவர்களை அழைத்துவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

11



## ரணிலைத் துருவுவதற்கு தயாராகின்றது சி.ஐ.டி..!



கொழும்பு, ஜூன் 10

தரமற்ற மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணை நடத்தவுள்ளனர்.

முன்னாள் சுகாதார

11

## கம்மன்பிலவுக்கு எதிராக சி.ஐ.டி.யினர் விசாரணை!

கொழும்பு, ஜூன் 10

முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவிடம் நேற்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் பல மணிநேர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

துறைமுகத்தில் சேமிக்கப்பட்டிருந்த 323 கொள்கலன்கள் எந்தச் சோதனையுமின்றி அண்மையில் விடுவிக்கப்பட்டதாக நாட்டில் பல்வேறு கருத்துகள் பரப்பப்பட்டுவருகின்

11

## இறந்த திமிங்கிலம் ஒதுங்கியது புங்குடுதீவில்!



யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாணம் - புங்குடுதீவு கடற்பகுதியில் திமிங்கிலமொன்று இறந்தநிலையில் கரையொதுங்கியுள்ளது. திமிங்கிலத்தில் இருந்து அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசும் நிலையில், அதை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ம-27-22)

வவுனியாவில்

## வீடொன்றில் கஞ்சா மீட்பு

### ஒருவர் கைது

வவுனியா, ஜூன் 10

வவுனியாவில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், 10 கிலோ கஞ்சா மீட்கப்

11

## வாள்வெட்டு சந்தேகநபர் கைதானார்!

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் அதிகாலையில், தேனீர் கடைகளுக்குச் செல்பவர்களை இலக்குவைத்து, வாள்வெட்டு தாக்குதல் நடத்தியமை மற்றும் தாக்கியமை ஆகிய குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய

11



பூச்சந்தி பூராளி

கால்நடை மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்புப் போர்

விரிவு பக்கம்:- 02

ஓய்வுபெற்ற இராணுவத்தினரை பொலிஸில் இணைக்கத்திட்டம்

விரிவு பக்கம்:- 05

போதைமாத்திரைப் பாவனை

## மாணவர்கள் மூன்று பேர் நன்னடத்தைப் பிரிவுக்கு!

யாழ்ப்பாணம், ஜூன் 10

போதைமாத்திரைகளைப் பாவித்த குற்றச்சாட்டில் மூன்று சிறுவர்கள் கைதுசெய்யப்பட்டு, அவர்கள் சிறுவர் நன்னடத்தைப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:- யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் நேற்றுமுன்தினம்

11

'அப்ப சிறைச்சாலை ஆணையாளரை எந்தச்சிறையில அடைப்பினம்?'

## சிறைச்சாலை ஆணையாளர் சி.ஐ.டி.யால் நேற்றுக் கைது

### பணிநீக்கம் செய்யவும் நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 10

சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன், அவரைப் பணியிடை நீக்கம் செய்வதற்கும் அமைச்சரவை

11

சட்டவிரோதப் பொதுமன்னிப்பு

## அநுராதபுரம் சிறைச்சாலையின் கண்காணிப்பாளருக்கு மறியல்!

கொழும்பு, ஜூன் 10

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பை சட்டவிரோதமாகப் பயன்படுத்தி, அநுராதபுரம் சிறைக்கைதி ஒருவரை விடுவித்த குற்றச்சாட்டில் அநுராதபுரம் சிறைச்சாலையின் கண்காணிப்பாளர் விளக்கமறியலில்

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.06.2025 செவ்வாய்க்கிழமை

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 09.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4097 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 09 19 23 42 |
| விசேட எழுத்து | N |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 09.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1164 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 02 20 51 55 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 09.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0123 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 5 0 6 5 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 09.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2202 |
| ஆங்கில எழுத்து | H |
| சுப்பர் இலக்கம் | 26 |
| வெற்றி இலக்கங்கள் | 22 23 47 76 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 09.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5855 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 6 7 4 5 1 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 09.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1885 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 12 21 29 51 |
| விசேட எழுத்து | I |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 09.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0430 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 4 5 1 5 |

# கால்நடை மருத்துவர்கள் நேற்று அடையாளப் பணிப்புறக்கணிப்பு

**யாழ்ப்பாணம், ஜுன் 10**

**அரச கால்நடை மருத்துவர்கள் சங்கம் நேற்று நாடளாவியரீதியில் ஒருநாள் அடையாளப் பணிப்புறக் கணிப்பை மேற்கொண்டது.**



கால்நடைகளின் மருத்துவத் தேவைகளைப் பெறவந்த மக்கள் பணிப்புறக்கணிப்புக் காரணமாக ஏமாற்றத்துடன் திரும்பிச்சென் றனர்.

அரசாங்கம் கால்நடை மருத்துவர்களுக்கான தனிச் சேவை யாப்பை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டிருந்தாலும் அது இன்னமும் ஆரம்பிக்கப்படாமை, கமத்தொழில் அமைச்சரின் தன்னிச்சையான செயற்பாடுகள் போன்ற பலகோரிக்கைகளை முன்வைத்து இந்த அடையாளப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் கால்நடை மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். (எ-110,113)

## வீதிவிபத்தில் இருவர் காயம்

கிளிநொச்சி, ஜுன் 10

முகமாலையில் ஏ-9 வீதியில் நேற்றுமுன்தினம் நடந்த விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ்ஸும், கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் காயமடைந்த நிலையில் பளை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் விபத்துத் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (எ-113)

## உடைமையில் ஐஸ்; இளைஞன் கைது

கிளிநொச்சி, ஜுன் 10

வீட்டில் ஐஸ் போதைப்பொருளை மறைத்துவைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் நள்ளிரவு கிளிநொச்சிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சிப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகலுக்கு அமைய திருவையாறுப் பிரதேசத்தில் வைத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். வீட்டு வளாகத்தில் சாக்கு ஒன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 31 கிராம் 300 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-113)

## பொலிஸ் அதிகாரிகள் பலருக்கு இடமாற்றம்



கொழும்பு, ஜுன் 10

பொலிஸ் பொறுப்பதிகாரிகள் பலருக்கு இடமாற்றல்கள் மற்றும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் உடனடியாக நடைமுறைக்குவரும்வகையில் இந்த இடமாற்றங்கள் மற்றும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 09.06.2025 | திங்கட்கிழமை | 0563 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| L | 0 8 1 3 5 3 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 09.06.2025 | திங்கட்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2829 | H | 34 38 62 76 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 09.06.2025 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| S | 13 38 43 49 | 4990 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 09.06.2025 | திங்கட்கிழமை | |
| மகரம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 21 38 51 52 | 4541 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 09.06.2025 | திங்கட்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| T | 19 | 07 22 41 62 | 2005 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 09.06.2025 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| B | 07 09 14 22 | 2655 |

| JAYODA | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 09.06.2025 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| I | 25 27 45 66 | 2133 |

## தேசியகீதத்துக்குப் பதிலாக தேசிய மக்கள் சக்தி கீதம்!

### நாத்தாண்டியப் பிரதேசசபையில் குழப்பம்

கொழும்பு, ஜுன் 10

நாத்தாண்டியப் பிரதேசசபையின் புதிய சபை ஆரம்ப நிகழ்வில் தேசியகீதத்துக்குப் பதிலாக தேசிய மக்கள் சக்தி கீதம் இசைக்க முற்பட்டதால் பலத்த சர்ச்சை ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாத்தாண்டியப் பிரதேசசபையில் பெரும்பான்மையை தேசிய மக்கள் சக்தி பெற்றுள்ள நிலையில் புதிய சபை ஆரம்ப நிகழ்வில் தேசியகீதத்திற்குப் பதிலாக தேசிய மக்கள் சக்தி கீதம் இசைக்க முற்பட்டனர் என்றும், அதையடுத்து எதிர்க்கட்சிகளான பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. எதிர்க்கட்சி உறுப்பினர்களின் எதிர்ப்பையடுத்து பிரதேச செயலர் தான் தேசிய மக்கள் சக்தி கீதத்தை இசைக்குமாறு கூறினார் என்று தவிசாளரும் பிரதித் தவிசாளரும் தெரிவித்துள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-6)

## தேவாலயத்தில் வெடிகுண்டு; மூவர் மீது குற்றப்பத்திரிகை

கொழும்பு, ஜுன் 10

பொரளை தேவாலயத்தில் வெடிகுண்டு வைக்க முயன்றனர் என்று ஓய்வுபெற்ற மருத்துவர் உட்பட மூன்று பேர் மீது உயர்நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்பட்டுள்ளது. லியனகே தயானந்தா, டாக்டர் ஷெர்லி பெலிசியன் ஹேரத் மற்றும் றுவன் சிறி ஹேமந்த ஆகியோர்மீதே குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள்மீது இரண்டு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. 2021ஆம் ஆண்டு ஜுலை மாதம் 12ஆம் திகதி முதல் 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் பொரளை தேவாலயத்தில் வெடிகுண்டு வைக்கச் சதி செய்யப்பட்டது என்றும், 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் திகதி தேவாலயத்தில் வெடிகுண்டு வைக்க முயன்றனர் என்றும் அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இரண்டாவது சந்தேகநபரான மருத்துவர் ஹேரத் தாக்கல்செய்த அடிப்படை உரிமைகள் மனுவில், தான் கைதுசெய்யப்பட்டு சட்டவிரோதமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளேன் என்றும், சட்டத்தரணியை அணுக அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்திருந்தார்.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், மனுதாரர் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார் என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார். இருதரப்பு வாதங்களையும் செவிமடுத்த மன்று ஹேரத்தின் மனுவைத் தள்ளுபடி செய்துள்ளது. (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுங்க அதிகாரிகள் பலர் தப்பியோடத் திட்டமாம்

## நடவடிக்கை எடுக்கக் கோருகின்றார் கம்மன்பில

**கொழும்பு, ஜூன் 10**

**323 கொள்கலன்களைப் பரிசோதனையின்றி விடுவித்த சுங்க அதிகாரிகளுக்கு நாட்டைவிட்டுத் தப்பியோடும் திட்டம் உள்ளது. அவர்கள் வெளிநாடு செல்வதைத் தடுப்பதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிவிருது ஹெல உறுமயவின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

கொள்கலன்கள் விவகாரம் தொடர்பில் வெளியிடப்பட்ட கருத்துகள் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக கம்மன்பில குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்றுச் சென்றிருந்தார். குற்றப்புலனாய்வுத் திணைக்கள வளாகத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பரிசோதனையின்றிக் கொள்கலன்களை விடுவிப்பதற்குத் தீர்மானம் எடுத்த குழுவின் தலைவராக செயற்பட்டவர்தான் சுங்கத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட. அவர்தான் ஊடக சந்திப்பை நடத்தியுள்ளார். எனவே, நடவடிக்கைகள் தொடர்பில் அவர் வெளியிடும் கருத்துகளை எவ்வாறு நம்புவது? கள்வனின் தாயிடமே கள்வனைப் பற்றி குறிபார்ப்பதுபோல்தான் இது உள்ளது. இந்த விவகாரத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நாட்டைவிட்டு அவுஸ்திரேலியா மற்றும் பெல்ஜியம் போன்ற நாடுகளுக்குத் தப்பிச்செல்லும் திட்டம் உள்ளது.

எனவே, அவர்கள் வெளிநாடு செல்வதற்குத் தடைவிதிக்கவேண்டும் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் கோரவுள்ளோம். குற்றம் நடந்தது பற்றி விசாரணை இல்லை. அது பற்றிக் கதைத்தவர்கள்தான் விசாரணைக்கு அழைக்கப்படுகின்றனர். விசாரணைக்கு அழைத்து எமது வாயை மூடமுடியாது-என்றார். (எ-44)

# வாழைச்சேனை காகித ஆலையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 10

நட்டம் காரணமாக மூடப்பட்டுள்ள வாழைச்சேனை காகித ஆலையை மீண்டும் இயங்கவைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கைத்தொழிலமைச்சர் சுனில் ஹந்துன் நெத்தி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

புதிய இயந்திரங்களை இறக்குமதிசெய்து உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும், பழைய இயந்திரங்களை வைத்து அருங்காட்சியகம் ஒன்றை ஆரம்பித்து அதனை ஒரு சுற்றுலாமையமாக மாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் தனது பதிவில் தெரிவித்துள்ளார். (எ-25,6)

# அடுத்த தேர்தலில் அநுரவுக்கு தோல்வி

### உதய கம்மன்பில ஆரூடம்



கொழும்பு, ஜூன் 10

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நிச்சயம் தோல்வியடைவார் என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்த ஆட்சியில் மக்கள் எதிர்பார்த்த எதுவும் நடக்கவில்லை. பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் ஆட்சி கிடையாது. பாதாளகுழுக்களுடன் அரசாங்கத்துக்கு நெருங்கிய தொடர்புண்டு. இந்த ஆட்சியில் பாதாளக்குழுக்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. பயமில்லாமல் சுட்டுத்தள்ளுகிறார்கள். அரசாங்கம் காப்பாற்றும் என்ற நம்பிக்கையில் இவ்வாறு துணிச்சலுடன் செயற்படுகிறார்கள்.

கடந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் 23 இலட்சம் மக்கள் அரசை விட்டு விலகியுள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இறுதியில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகள் மேலும் குறைந்து அவர் நிச்சயம் தோல்வியடைவார்-என்றார். (எ-75)

# ஓய்வூதியருக்கு உயர்பதவிகள்; முறைப்பாடு செய்யலாம்

கொழும்பு, ஜூன் 10

ஓய்வுபெற்றவர்களுக்கு உயர்பதவி நியமனங்கள் வழங்குவது தொடர்பாக ஏதாவது ஆட்சேபனைகள் இருப்பின் முறைப்பாடு செய்யமுடியும் என உயர்பதவிகளுக்கான குழு தெரிவித்துள்ளது.

அண்மையில் வழங்கப்பட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள் நியமனம் மற்றும் யுனெஸ்கோ தூதுவர் நியமனங்கள் தொடர்பாகவே உயர்பதவிகளுக்கான குழு இவ்வாறு தெரிவித்துள்ளது. (எ-25,6)

# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

கொழும்பு, ஜூன் 10

கடந்த வெள்ளிக்கிழமையுடன் ஒப்பிடுகையில் அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று வீழ்ச்சியடைந்தது. அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 294 ரூபா 99 சதமாகவும், விற்பனைப் பெறுமதி 303 ரூபா 31 சதமாகவும் காணப்பட்டது. ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 398 ரூபா 53 சதமாகவும், விற்பனைப் பெறுமதி 412 ரூபா 58 சதமாகவும் காணப்பட்டது. யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 335 ரூபா 12 சதமாகவும், விற்பனைப் பெறுமதி 347 ரூபா 91 சதமாகவும் காணப்பட்டது. சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 356 ரூபா 36 சதமாகவும், விற்பனைப் பெறுமதி 372 ரூபா 42 சதமாகவும் காணப்பட்டது. கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 214 ரூபா 31 சதமாகவும், விற்பனைப் பெறுமதி 222 ரூபா 75 சதமாகவும் காணப்பட்டது. (எ-[illegible])




# 'என்ன சத்தம் இந்தநேரம்?'

ஒருபக்கம் எங்கட அரசியல்கோமாளியள் விதவிதமான கூத்துகளை ஆடி சனத்தை வெறுப்பேத்திக்கொண்டிருக்கேக்க, மற்றப்பக்கம் முப்பது வருசத்துக்கு முதல் காணாமல்போனவையின்ர எலும்புக்கூடுகள் செம்மணிக்குள்ள இருந்து வெளியில வரத்தொடங்கியிருக்கு. முந்தி கிருசாந்தி எண்ட மாணவியை செம்மணியில நிண்ட ஆமிக்காரர் சீரழிச்சுக் கொலைசெய்த பிறகுதான் செம்மணியில இப்பிடிக் காணாமல் போனவையை எல்லாம் கொலைசெய்து தாட்டிருக்கிறாங்கள் எண்டது எல்லாருக்கும் தெரியவந்தது. ஆனால் அப்ப ஒண்டிரண்டு இடங்களில மட்டும் தோண்டிப்போட்டு விட்டிட்டினம். அப்ப விடுபட்ட புதைகுழியள்தான் இப்ப தோண்டுப்பட்டுக்கொண்டிருக்குது.

யாழ்ப்பாணத்தை ஆமி முழுசாப் பிடிச்சாப் பிறகு செம்மணியில சனம் சந்தடி இருக்கிறேலை. அது தான் அவைக்கு உப்பிடி ஆக்களைச் சாக்கொண்டு, மண்ணுக்க வெட்டித் தாக்கிறதுக்கு வசதியாப் போட்டுது. அதோட பின்னுக்கு இப்பிடியெல்லாம் புதைகுழியளைக் கண்டுபிடிப்பினம், அதைவைச்சு தங்களுக்கு வழக்குப்போடுவினம் எண்டும் ஆமிக்காரர் யோசிக்கேலை. ஆனால் உப்புத் திண்டவன் தண்ணி குடிக்கத்தானே வேணும். அதாலதான் இப்ப புதைகுழியள் ஒவ்வொண்டா வெளிப்பட்டு, ஆமிக்காரரை அலறவைக்குது. செம்மணியில எப்பிடியும் ஒரு 600 பேருக்குக் கிட்ட சாக்கொண்டு, மண்ணுக்க தாட்டிருப்பினம். அந்த 600 பேரும் சும்மா சாகேலை. நினைச்சுப் பாக்கவே ஏலாத சித்திரவதையளை அனுபவிச்சுத்தான் செத்திருக்கினம். அதைவிட அரைகுறை உயிரோடையும் கனபேரைத் தாட்டிருக்கிறாங்கள்.

இப்பிடி அவலமாச் செத்தவை பேயா அலைவினம் எண்டு பழையாக்கள் சொல்லுறவையெல்லோ. நடக்கிறதைப் பாக்கேக்க அதிலையும் உண்மை இருக்குத்தான் போல. உந்தப் புதைகுழியளைக் கண்டுபிடிச்சதில இருந்து, இப்பவரைக்கும் அந்த இடத்தில காவலுக்கு ரண்டு, மூண்டு பொலிஸ்காரரைப் போட்டிருக்கு. ஆனால் அவையள் சிலவேளை இரவு அந்தப் புதைகுழிக்கு கிட்ட நிக்காமல் கொஞ்சம் தள்ளிவந்து, சனப் புழக்கம் உள்ள இடத்திலதான் நிக்கினமாம். ஏனெண்டால் நடுச்சாமத்தில அந்தப் புதைகுழியள் இருக்கிற இடத்தில பொம்பிளையளும், குழந்தைப் பிள்ளையளும் அழுகிற சத்தம் பெரிசாக் கேக்குதாம். சிலநேரம் அவை கெஞ்சிறமாதிரியும், கோபத்தில கத்துறமாதிரியும் சவுண்ட் வருகுதாம். அந்தப் பயத்திலதான் பொலிஸ்காரர் அங்க நிக்கப் பயந்து கொஞ்சம் தள்ளிவந்துநிக்கினமாம். அதோட தங்களுக்குத் துணையா சுடலைக் காரரையும் இரவு வந்துநிக்கச் சொல்லுகினமாம். பாம்பெண்டால் படையே நடுங்கேக்க, பேயெண்டால் பொலிஸூக்கும் பேதி வரத்தானே செய்யும்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி மாவட்டத்தில் தொழில் முயற்சியில் ஈடுபடும் அங்கவீனமுற்ற நபர்களின் உற்பத்திப் பொருள் தொடர்பான செயலமர்வு கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன்விருத்தி நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன் வளவாளராக மாவட்டச் செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் சஜீபன் கலந்து கொண்டார். (ச-25,113)

# பாதாளக்குழுக்கள் அட்டகாசம் பொன்சேகாவே ஒடுக்குவார்!

## ஆசு மாரசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

பாதாளக்குழுக்களை ஒழித்து தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா விடம் பொறுப்பை ஒப்படைக்கவேண்டும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஆசு மாரசிங்க அரசிடம் கோரிக்கைவிடுத்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதாளக்குழுக்களின் அட்டகாசம் இப்போது நாட்டில் அதிகரித்துள்ளது. துப்பாக்கிச்சூடுகள் அதிகரித்து எங்கும் கொலைக்களமாக நாடு மாறியுள்ளது. இதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை. பாதாளக்குழுக்களை ஒழித்து தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம் பொறுப்பை ஒப்படைக்கவேண்டும். அவரால் மாத்திரம்தான் இதைச் செய்யமுடியும். அவர் திறமையானவர் அவரால் மாத்திரம்தான் போதைப்பொருள் பாவனையை முறியடித்து பாதாளக்குழுக்களை ஒழித்து தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்தமுடியும்.

இந்த அரசிலும் அப்படியான துணிச்சலான செயற்பாட்டைக் காணமுடியவில்லை. நாம் வீதியால் செல்வதற்கே பயப்படுகிறோம். அந்தளவுக்கு நாட்டின் பாதுகாப்பு நிலைமை மாறியுள்ளது.

சிறு குழந்தைகள்கூட துப்பாக்கிச்சூட்டில் உயிரிழக்கின்றனர்- என்றார். (ச-75)

## மரண அறிவித்தல்



**செபமாலை மரியநாயகம் (நல்லாயன்)**

பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை மரியநாயகம் (நல்லாயன்) நேற்று (09.06.2025) திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபமாலை-மார்கிரட் தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்ற பற்றிமாதா ஜெயமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அந்தோணிமுத்து இருதயநாயகி ஆகியோரின் அன்பு மருமகனும், அன்ரன் சுதாகரனின் (விசேட வைத்திய நிபுணர் கதிரியக்கவியல்) அன்புத் தந்தையும், சுரனுதாவின் (வைத்தியர்) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பழைய ஆஸ்பத்திரி வீதி வல்வெட்டித்துறையிலுள்ள அன்னாரது இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (10.06.2025) செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு வல்வெட்டித்துறை புனித செபஸ்த்தியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு வல்வெட்டித்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 17.04.1936



மறைவு 08.06.2025

**கிரேஸ் பாக்கியரத்தினம் வெற்றிவேலு**

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிரேஸ் பாக்கியரத்தினம் வெற்றிவேலு அவர்கள் கடந்த (08.06.2025) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-பாக்கியம் தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு-பத்தினி தம்பதியின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஜோர்ஜ் வெற்றிவேலு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான குணரத்தினம், ஞானரத்தினம் ஆகியோரின் அன்பு தங்கையும் காலஞ்சென்ற இரத்தினவதனா (ஓய்வு பெற்ற ஆசிரியை சென் ஜோன்ஸ் கல்லூரி), இரத்தினமாலா, காலஞ்சென்ற இரத்தினராசா (வடக்கு கிழக்கு கல்வித்திணைக்களம்), இரத்தினவேல் (யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்), இரத்தினசிங்கம் காணாமல் ஆக்கப்பட்டோர்), இவ்லின் இரத்தினலீலா (முன்னாள் யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரியை, கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற அருட்செல்வம் (ஓய்வு பெற்ற சென் ஜோன்ஸ் கல்லூரி ஓய்வு பெற்ற எழுதுநர்), திரு.கருணாமூர்த்தி (ஓய்வு பெற்ற தொழிநுட்ப உத்தியோகத்தர்), பிரபதாரணி (கனடா), சுபாங்கனி, ராஜ்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் மேரிகாஞ்சனா (அரச முதலீட்டு வங்கி-வவுனியா), சுஜந்தன் (பொறியியலாளர்-கனடா), மாதுரி (பொறியியலாளர்-கனடா), தெபோரா (பல்கலைக்கழக மாணவி), டானியல்ராஜ் (பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவன்), ரூத் காருண்யா (HNDE-English), டினோஜன், இவாஞ்சலின், அன்றே (கனடா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஜெசிக்கா, ஜெனிற்றா, ஜெரோமி ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (11.06.2025) புதன்கிழமை முற்பகல் 09.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நேரியதூது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இரத்தினவாசம்
இலுப்பையடி மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

021 227 1194
001 647 7649 754 லீலா-மகள் (கனடா)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 10.01.1946



மறைவு 09.06.2025

**தவமணி திருவம்பலம்**
**(ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்)**

வெள்ளாம் போக்கட்டி கொடிகாமத்தை பிறப்பிடமாகவும், படித்தமகளிர் திட்டம் மிருசுவில், வெள்ளாம் போக்கட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட தவமணி திருவம்பலம் அவர்கள் நேற்று (09.06.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை-தெய்வானைப்பிள்ளை தம்பதியின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற சங்கரலிங்கம்-வேல்அம்பாள் தம்பதியின் பாசமிகு மருமகளும், திருவம்பலத்தின் அன்பு மனைவியும் சந்திரகாந்தி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), சாந்தநாயகி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), சறோசா, திருக்கேதீஸ்வரன் (சுவிஸ்), சித்திராதேவி (இத்தாலி) ஆகியோரின் சகோதரியும் சீவரத்தினம் (ஓய்வு நிலை அதிபர்), காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் தபோநிதி (ஓய்வு நிலை பலநோக்கு கூட்டுறவுச்சங்க உத்தியோகத்தர்-சாவகச்சேரி), பாலசுந்தரம் (இத்தாலி), வாசுகி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் குகப்பிரகாஸ் (அவுஸ்திரேலியா), பிரணவன் (லண்டன்) ஆகியோரின் சிறிய தாயாரும் சஞ்சுதா (கட்டார்), சஞ்சீவன் (பிரான்ஸ்), சர்மிளன் (ஆசிரியர்-மு/மல்லாவி மத்திய கல்லூரி), சரணிதா (நிதி உதவியாளர்- வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி-கைதடி), ஸ்ரீபன், இந்துசன், கஜீபன் (இத்தாலி) ஆகியோரின் பெரிய தாயாரும் சபூரா சபீசன் (சுவிஸ்), சுமதி (அவுஸ்திரேலியா), கிறிஸ்ரா (லண்டன்), ஜனகன் (கட்டார்), சிவசக்தி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் பவேஷ் சுபனேஷ், சரனேஸ் தியாரா, சஸ்வின், பிரவீன், லக்ஷரா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் ஏறியால்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வெள்ளாம் போக்கட்டி,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 555 9612

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

தவறு நேர்ந்துவிடுமோ என்று அஞ்சி அஞ்சி
எந்தச் செயலையும் செய்யாமல்
பின்வாங்குவது இழிவானது.

– ஹென்றி போர்ட் –

## நம்பிக்கையிழக்கும் நீதி!

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதியொருவர், கடந்த வெசாக்பண்டிகைக் காலத்தில் பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்டுள்ளமை பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. வெகுசில நாள்களுக்கு முன்னர் சிறையிடப்பட்டிருந்த அந்தக் கைதி, ஜனாதிபதிக்குத் தெரியாமல், சிறைச்சாலை நிர்வாகத்தால், தன்னிச்சையானவகையிலும், மோசடியான முறையிலும் விடுவிக்கப்பட்டுள்ளார் என்பதே நாடளாவிய ரீதியில் எழுந்துள்ள குற்றச்சாட்டாகும். ஆனால், இதன் பின்னால் உள்ள ஆபத்து மிகப்பெரியது. கருத்திற்கொள்ளப்படவேண்டிய விடயமும் கண்டிக்கப்படவேண்டிய விடயமும் அதுதான்.

சிறைக்கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்குவதென்பது ஜனாதிபதியின் அதிகாரத்துக்கும் நேரடிக் கட்டுப்பாட்டுக்கும் உரியவிடயம். எனவே, இவ்வாறானதொரு விடயத்தில், ஜனாதிபதிக்குத் தெரியாமல், அவரால் ஒப்பமிடப்பட்டு இத்தகைய குற்றவாளி ஒருவர் பொதுமன்னிப்பில் விடுவிக்கப்படுகின்றார் என்றால், நாட்டின் சிறைக்கட்டமைப்பும், நீதிக் கட்டமைப்பும், நிர்வாகக் கட்டமைப்பும் செயலற்றுப் போகின்றன என்பதே இதன்மூலம் புலப்படும் கருத்தாகும். எனவே, இத்தகையதொரு பலவீனமான அணுகல் சிறைத்துறையில் இருந்தமைக்காக நிச்சயம் அரசாங்கம் பொறுப்பேற்கவேண்டும். அதைவிடுத்து, 'ஜனாதிபதிக்குத் தெரியாமல் விடுவிப்பு', 'குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு' என்ற பொதுவான சொல்லாடல்களால்நிலைமையை சரிசெய்துவிடுவதற்கு அரசாங்கம் முனையக்கூடாது. விடுவிக்கப்பட்ட குறித்த குற்றவாளி ஓர் ஊழல் மோசடியாளர். ஆனால், அவரை 'உரிய சட்ட நியமங்களைப் பின்பற்றியே' விடுவித்ததாக சிறைத்துறை வாதாடி வருகின்றது. எனவே, சிறைத்துறையின் கருத்துக்கும் ஜனாதிபதி செயலகத்தின் கருத்துக்கும் இடையிலான முரண்பாடுகள் தொடர்பில் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய தெளிவுபடுத்தல்கள் வழங்கப்படவேண்டும். நாட்டின் நீதிக்கட்டமைப்பில் மக்கள் நம்பிக்கையிழந்தால், அது பேரழிவுகளுக்கு வழிவகுக்கும். எனவே, நீதியைக் கொன்று புதைகுழிக்குள் இறக்கும் இத்தகைய செயல்களுக்கு எதிராக ஜனாதிபதி அநுர உரியமுறையில் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பொதுமன்னிப்பு என்பது குற்றம் இழைத்தவர்களுக்கான சட்ட உரிமையல்ல. விசேட வரப்பிரசாதமோ அல்லது சலுகையோ அல்ல. அது கொண்டுவரப்பட்டதன் நோக்கம் வேறானது. பிணைப்பணம் செலுத்த முடியாதவர்களுக்கும், தண்டப்பணம் செலுத்தமுடியாதவர்களுக்கும், சந்தர்ப்பசூழ்நிலையால் தவறிழைத்தவர்களுக்கும், குடும்பச் சூழ்நிலையால் சிறைசெல்ல நேர்ந்தவர்களுக்கும் ஒரு வாய்ப்பையும், விடிவையும் வழங்குவதற்காகவே 'பொதுமன்னிப்பு' கொண்டுவரப்பட்டது. ஆனால், கடந்த அரசாங்கங்கள் பொதுமன்னிப்பை, இனவாதிகளினதும், ஊழல் மோசடியாளர்களினதும் விடுதலைக்கான சட்ட உரிமையாகவே கையாண்டு வந்தன. இதனால், அந்த அரசாங்கங்கள் மக்களின் எதிர்ப்பையும் வாரிக்குவித்தன. இதுவரை பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்ட அத்தனை பேரின் விவரங்களையும் அரசாங்கம் தீவிரமாக மீளாய்வுசெய்ய வேண்டிய கட்டாயத்தையும் இந்தச்சம்பவம் ஏற்படுத்திவிட்டது. ஏனெனில், இதுபோன்ற பல மோசடியான விடுவிப்புகள் கண்டறியப்படாமல் விடப்பட்டிருக்கலாம். அவற்றையும் கண்டுபிடித்து, பொதுமன்னிப்பில் மோசடி செய்த சூத்திரதாரிகளை இனங்கண்டு, அவர்களுக்கு உச்சபட்ச தண்டனை வழங்கப்படவேண்டும். இல்லாவிட்டால் திசைகாட்டி அரசாங்கமும் ஊழல் அரசாங்கம் என்ற அவப்பெயரைச் சம்பாதிக்கும் நிலை ஏற்படும்.



## ஒய்வுபெற்ற இராணுவத்தை பொலிஸில் சேர்க்கத் திட்டம்



பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

இராணுவத்தில் இருந்து சட்டபூர்வமாகப் பதவிவிலகிய 10 ஆயிரம் பேரைப் பொலிஸ் சேவைக்குள் சேர்த்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

45 வயதுக்குட்பட்ட, இராணுவத்திலிருந்து பதவிவிலகியவர்களுக்கே இந்த வாய்ப்பு வழங்கப்படுகிறது. அவர்களை 5 வருடத்துக்கு பணியமர்த்துவதற்கான பொருத்தமான அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)



## சமாதான நீதவான் பதவியில் மாற்றம்

கொழும்பு, ஜூன் 10

சமாதான நீதவான் பதவியில் நீதியமைச்சு சில மாற்றங்களைச் செய்துள்ளது.

இதுவரை காலமும் சமாதான நீதவான் பதவிக்கு விண்ணப்பிப்போர் க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்திருக்கவேண்டும் என்ற நிபந்தனை காணப்பட்டது. தற்போது புதிய வர்த்தமானி அறிவித்தலின்படி க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரு திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருக்கவேண்டும். தமிழ் அல்லது சிங்களத்தில் திறமைச்சித்தி பெற்றிருக்கவேண்டும்.

அகில இலங்கை சமாதான நீதவான் பதவிக்கு விண்ணப்பிப்போர் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரு பாடம் சித்தியடைந்திருப்பதுடன் மாவட்ட சமாதான நீதவானாக ஐந்து வருடங்கள் பணியாற்றியிருக்கவேண்டும். சமாதான நீதவான் பதவிக்கு விண்ணப்பிப்போர் சிறந்த உடல் ஆரோக்கியமுடையவர் என மருத்துவச்சான்றிதழ் சமர்ப்பிக்கவேண்டும். புதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் க.பொ.த. உயர்தர பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்திபெறாதவர்கள் ஆங்கிலத்தில் சான்றிதழ்களை வழங்க முடியாது. (எ-6)

## ரயில் திணைக்களத்துக்கு புதிதாக 900 பேர்

கொழும்பு, ஜூன் 10

ரயில் திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக புதிதாக 900 பேர் சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். ஏற்கனவே சேவையில் உள்ள 3 ஆயிரம் பேருக்கு பதவி உயர்வுகளும் வழங்கப்படவுள்ளன. செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் இந்த இரு விடயங்களும் நிறைவுசெய்யப்படும் என்று ரயில் திணைக்கள பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (எ-25,9)

## இலஞ்ச விசாரணை ஆணைக்குழுவுக்கு புதிய தலைவர்

கொழும்பு, ஜூன் 10

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் (விசாரணைப்பிரிவு) பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ்.மொஹான்லால் சிறிவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் சிலரும் பணி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எஸ்.கே.பண்டார அம்பாறைப் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவிலிருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குப் பணி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (எ-இ)

## இந்தவார இறுதிக்குள் மின்கட்டணத் திருத்தம்

கொழும்பு, ஜூன் 10

பொது ஆலோசனைகளின்போது பெறப்பட்ட 500க்கும் மேற்பட்ட எழுத்து மற்றும் வாய்மொழி சமர்ப்பிப்புகளை மதிப்பாய்வு செய்தபின்னர், மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பான இறுதி முடிவு இந்தவாரம் அறிவிக்கப்படும் என்று பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 500க்கும் மேற்பட்ட எழுத்து மற்றும் வாய்மொழி சமர்ப்பிப்புகள் பெறப்பட்டுள்ளன. அவற்றைப் பரிசீலனை செய்யும் செயன்முறை கடந்த வார இறுதிக்குள் நிறைவடைந்தது. தற்போது பரிந்துரைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்தவார இறுதிக்குள் இறுதி முடிவு அறிவிக்கப்படும் என்று பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை, இலங்கை மின்சாரசபை ஜூன் முதல் டிசெம்பர் வரையிலான காலத்திற்கு 18.3 வீத கட்டண உயர்வைக் கோரியுள்ளது. (எ-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பணவரவுக்குவாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி களை பிற்பகலுக்குமேல் தொடங்கவும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடிமுடியும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** சகோதரவகையில் வீண் செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக இருந்த முக்கியமான காரியம் ஒன்று அனுகூலமாக முடியும். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகள் வீட்டில் கல கலப்பான சூழ்நிலையை ஏற்படுத்தும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளையசகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்புகரையும். அக்கம்பக் கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்து கொள்வது நல்லது. வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி ஏற்படும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மாலையில் நண்பர்கள் மூலம் எதிர்பாராத ஆதாயம் கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக் கும். பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொண்டா லும் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.


**தனுசு:** குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் விற்பனை வழக்கம் போலவே இருக்கும். வாடிக்கையாளர்களிடம் கனிவான அணுகுமுறை அவசியம்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். தாய்வழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம்தேவை. மாலையில் சகோதரர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக சில வேலைகளை எடுத்துச் செய்யவேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்:** எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள்வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். கணவன் மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துகொள்வது மகிழ்ச்சிதரும்.





## கலைப் பாரம்பரிய மிடுக்குடன்

# அளவெட்டி கும்பிளாவளை பிள்ளையார் ஆலயம்

***அளவெட்டி கும்பிளாவளை அருள்மிகு பிள்ளையார் கோவில் தேர் திருவிழாவை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது.***

■ சைவப்புலவர் வைத்தியலிங்கம் பாலகிருஷ்ணன்

யாழ்ப்பானத்து இந்து சமயமரபில் திருக்கோவிற் பண்பாடும், வழிபாட்டு மரபும் சிறப்புடையன. கோவில்கள் நிறைந்த சிறப்பு யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குரிய தனித் துவங்களில் ஒன்றாகும். யாழ்ப்பாணத்து சைவ மரபில் விநாயகர் முதல் வைரவர் ஈறாக எண் ணிறைந்த பெருங்கோவில்களும் குலக்கோவில் களும் விளங்குகின்றன. அத்தகைய சிறப்பில் வரலாற்றுச் சிறப்பும் கலைப் பாரம்பரியத்தின் மிடுக்கும் நிறைந்த திருக்கோவிலே அளவெட்டி கும்பிளாவளை அருள்மிகு பிள்ளையார் ஆல யம் ஆகும்.

இவ்வாலய வரலாறு பல்வேறுவிதமான ஐதீகங் களைத்தன்னகத்தேகொண்டுவிளங்குகின்றது. இவ்வாலயம் வெள்ளெருக்கு மரத்திடலின் நடு வில் தான்தோன்றியாகத் தோன்றிய மூலவரை யுடையது. கொம்பு துவளை, கும்பல் ஆவளை, கும்பிளாவளை எனப் பெயர் மருவியது என்பர். இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக பழைமையானது என்பர். மாவிட்டபுரம் எனும் முருகன் திருக்கோவில் தோன்றக் காரணமாக அமைந்தது. நகுலேஸ்வரத்தில் காணப்படும் கண்டகி தீர்த்தம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆகியவற்றுடன் மாருதப் புரவீகவல்லி யினால் முறைமையாக குதிரைமுகம் நீங்கு வதற்கு முதற் கடவுளாகிய விநாயகரது சாபம் நீங்கி அருள் பெறுவதற்காக ஏழு விநாயகர் திருவுருவங்கள் ஸ்தாபிக்கப்பெற்றன.


மாருதப் புரவீகவல்லி மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திற்கு தெற்காக கொல்லங்கலட்டி, வரத் தலவிளான், அளவால்லை, கும்பிளாவளை, பெருமாக்கடவை, ஆலங்குழாய், கல்வளை ஆகிய ஏழு தலங்களில் விநாயக சிலைகளை ஸ்தாபித்ததோடு இவ்வேழு ஆலயங்களிற்கும் நடுநாயகமாக விளங்குவதே கும்பிளாவளை ஆகும். இத்தலம் முன்றிற்சோலை, மாவிடு திட்டி, குமாரத்திகுளம் எனும் பல்வேறு சிறப்புக ளைத் தன்னகத்தேகொண்டு விளங்குகின்றது. மாருதப்புரவீகவல்லியின் குதிரைமுகம் நீங்கி யது தொடர்பான கதைமரபுண்டு. மாவிடுதிட்டி முழுமையாக நீங்கிய தலமே இக் கும்பாவளை எனும் தலமாகும்.

கும்பிளாவளைப் பிள்ளையார் ஆலயம் சார்ந்த வரலாறறிந்த தகவல்கள் இவ்வாலயத்தின் திரு வூஞ்சல் பதிகத்தின் ஒன்பதாம் பாடலிலும் திருப் பள்ளியெழுச்சிப் பாடல்களிலும் இராஜகோபுரச் சிற்பங்களில் ,தேர்ச்சிற்பங்களில் காணமுடி கின்றது.

பிரணவப் பொருளாகவும் முழுமுதற் கடவுளாக வும் விளங்கும் கும்பளாவளைப் பிள்ளையா ருக்கும் நடைபெறவிருக்கும் தேர் உற்சவத்தில் நாம் அனைவரும் வழிபட்டு சிவானந்தப் பெரு வாழ்வைப் பெற்றுய்வோமாக.

புனித ஹஜ் பெரு நாளை முன்னிட்டு கிளிநொச்சி நகர் பள்ளிவாசலில் கடந்த சனிக்கிழமை பெருநாள் தொழுகை இடம் பெற்றது.

(ச-25,113)





மண்டைதீவு வெலசுமன கடற்படையினரால் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின்கீழ் மண் டைதீவுப் பகுதியில் அண்மையில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.


மண்டைதீவுப் பிரதேச மருத்துவமனை ஊழியர் கள் மற்றும் சிவில் சமூகமட்ட அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் இந்த வேலைத்திட்டத்தில் இணைந்துகொண்ட னர்.

(ச-25,23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவை மாற்றத்தில் அவசரம் தேவையில்லை

## அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 10

**அமைச்சரவையில் மாற்றம் செய்வதா இல்லையா என்று கொஞ்சம் பொறுத்திருந்து பார்ப்போம் என்று அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாம் புதியவர்கள்; அனுபவமற்றவர்கள்; பொய் கூறி ஆட்சியைக் கைப்பற்றியவர்கள்; ஆட்சியை நடத்துவதற்கு இயலாதவர்கள் என்றெல்லாம் விமர்சனம் செய்கிறவர்கள் நாங்கள் செய்கின்ற சேவைகளை மாற்றங்களை அவதானிக்கவேண்டும்.

மக்கள் இந்த அரசுடன்தான் உள்ளார்கள். அவர்களின் விமர்சனத்துக்கு நாம் பதில் வழங்குவோம். அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுப்போம். மக்களோடு இருக்கிறோம். நாம் புதியதொரு பயணத்தைக் தொடங்கி இருக்கின்றோம். எம்மை நோக்கி வீசுகின்ற எல்லாக் கற்களையும் கணக்கில் எடுக்கமுடியாது. யார் வீசுகிறார் என்று தேட முடியாது. ஒவ்வொரு கல்லுக்கும் பதில் கல் வீசமுடியாது. குரைக்கின்ற ஒவ்வொரு நாய்க்கும் கல் எறியமுடியாது.

நாம் புதிய பயணத்தைத் தொடங்கியிருக்கிறோம். நான்கைந்து வருடங்களில் நாடு பெரும் மாற்றத்தை எதிர்கொள்ளும். ஒருபோதும் பின்னோக்கிச் செல்லாது. நாங்கள் ஒவ்வொருவரும் அதற்காக அர்ப்பணிப்புடன் வேலைசெய்கிறோம்.

அமைச்சரவை மாற்றம் பற்றிப் பேசப்படுகிறது. மக்களே இந்தக் கதையைத் தொடங்கியுள்ளனர். சில நேரங்களில் அது தேவையென்றால் செய்யலாம். இப்போது தேவையா இல்லையா என்று சற்று பொறுத்திருந்து பார்ப்போம்-என்றார். (எ-75)

# வரிசெலுத்தத்தவறிய தொழிலதிபர் கைது!

கொழும்பு, ஜூன் 10

முன்னாள் இராஜாங்க அமைச்சர் தினேஷ் கங்கந்தவின் மனைவி குஷானி நாணயக்கார, நீண்டகாலமாக வருமான வரி செலுத்தாமையால் கொழும்பு மத்திய குற்றப்புலனாய்வுப் பணியகத்தினால் கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நீண்டகாலமாக 700 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வருமான வரி செலுத்தாமையால் குஷானி நாணயக்காரவுக்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கிரீன் லங்கா டிராவல்ஸ், கிரீன் சீட் லங்கா மற்றும் கிரீன் ஸ்ரீலங்கா ஷிப்பிங் ஆகியவற்றின் வர்த்தகரும் பணிப்பாளருமான குஷானி நாணயக்கார, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் எச்சரிக்கைகள் விடுத்தும் பல ஆண்டுகளாக வரி செலுத்தத் தவறியுள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் பல தடவைகள் விடுக்கப்பட்ட உத்தியோகபூர்வ அறிவிப்புகளைப் புறக்கணித்த பின்னர் அவர் மீது சட்டநடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இந்த தொழிலதிபருக்கு எதிராக வருமானவரிச் சட்டத்தின்கீழ் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. குஷானி தொடர்ந்து நீதிமன்றத்தைத் தவிர்த்துவந்ததால், அவரை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்த திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. அதையடுத்து, கொழும்பு மத்திய குற்றப்புலனாய்வுப் பணியகத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் கண்காணிப்பாளர் ஷானி அபேசேகர தலைமையில் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையில் நாரஹேன்பிட்டவில் உள்ள வீடொன்றில் வைத்து அவர் கைதுசெய்யப்பட்டார். வீட்டின் பின் வாசல் வழியாகத் தப்பிச்செல்ல முயன்ற நிலையில் வீட்டைச் சுற்றிவளைத்திருந்த பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-இ)

# அரசாங்க வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 10

இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் அரசாங்க வருமானம் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டின் முதல் மாதங்களில் 1,218.07 பில்லியன் ரூபாவாக இருந்த அரச வருமானம், இந்த வருடத்தின் முதல் 4 மாதங்களில் 236.60 பில்லியன் ரூபாவால் அதிகரித்து 1,454.67 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளது. இது 19.42 சதவீத அதிகரிப்பாகும்.

இந்த ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் மட்டும் 463.19 பில்லியன் ரூபா வரிமூலம் கிடைத்துள்ளது என்றும், அந்த மாதத்தில் வாகன இறக்குமதி தடை தளர்த்தப்பட்டதன் காரணமாக வரி வருமானம் அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# மஹிந்தானந்த மேன்முறையீடு

கொழும்பு, ஜூன் 10

அரசாங்கத்துக்கு 53 மில்லியன் ரூபாவுக்கு மேல் இழப்பை ஏற்படுத்திய ஊழல் குற்றத்தின்கீழ் இலஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் விளையாட்டு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, அந்தத் தண்டனையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளார்.


வழக்கறிஞர் சனத் விஜேவர்தனமூலம் தாக்கல் செய்யப்பட்ட இந்த மேன்முறையீடு, உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எஇ)

# மன்னார் நடுக்குடாக் கடலில் 1,314 கிலோ பீடி இலை மீட்பு

மன்னார் நடுக்குடாக் கடற்பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை நடத்தப்பட்ட சிறப்புத் தேடுதல் நடவடிக்கையில் ஆயிரத்து 314 கிலோ பீடி இலைகளுடன் 4 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

வட மத்திய கடற்படைக் கட்டளையின் இலங்கை கடற்படைக்கப்பல் கஜபா நிறுவனம் நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின்போது, நடுக்குடா கடற்பகுதியில் கரையை நோக்கிப் பயணித்த இரண்டு சந்தேகத்திற்கிடமான டிங்கிப் படகுகள் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

அவற்றில் சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பீடி இலைகள் கண்டுபிடிக்கப்பட்டன. படகுகளில் இருந்த நால்வர் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் கல்பிட்டிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது. (எ-125)



# மன்னார் நகரப் பாடசாலைகளில் சுகாதாரத் தரம் தொடர்பில் ஆய்வு

மன்னார், ஜூன் 10

மன்னார் நகர்ப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் நடைபெற்ற ஆய்வு நடவடிக்கைகளில் பாடசாலை ஒன்றில் பல்வேறு சுகாதாரக் குறைபாடுகள் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குக் கிடைத்த எழுத்துமூல முறைப்பாடுகளைத் தொடர்ந்து மன்னார் பொதுச்சுகாதார மருத்துவ அதிகாரி ரூபன் லெம்பேட்டின் ஆலோசனையில் தலைமைப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் நேற்றுப் பாடசாலைகளில் ஆய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மாணவ, மாணவிகள் பயன்படுத்தும் மலசலகூடங்கள் உரியமுறையில் சுத்தம் பேணப்படாமை, பயன்படுத்தமுடியாத நிலையில் காணப்படும் மலசலகூடங்கள், சுகாதாரமற்ற முறையில் சிற்றுண்டிச்சாலையில் கையாளப்படும் உணவுப்பொருள்கள், மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச உணவு தயாரிக்கும் பகுதி பொருத்தமான முறையில் பராமரிக்கப்படாமை, கழிவு நீர் வெளியேறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமை, டெங்கு நுளம்பு பரவும் வகையில் சுற்றுச்சூழல் காணப்படுகின்றமை, ஆசிரியர் விடுதி துப்புரவின்மை, பாடசாலை வளாகத்தில் கழுதை, நாய் போன்ற மிருக நடமாட்டம், பொலித்தீன் மற்றும் ஏனைய குப்பைகள் ஒழுங்கான முறையில் அகற்றப்படாமை போன்ற பல்வேறு சுகாதாரக் குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளன. பாடசாலை சூழலில் மாணவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தகூடிய வகையிலான பொருள்கள், உலோகங்கள், கட்டடங்கள், மணல் திட்டுகள் என்பன அடையாளப்படுத்தப்பட்ட நிலையில் அவற்றையும் அகற்றுவதற்கான பணிப்புரை மன்னார் பொது சுகாதார அதிகாரிகளால் பாடசாலை நிர்வாகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு உணவு தயாரிக்கும் பகுதி திருத்தம் செய்யப்படும்வரை மூடுமாறு பொதுச்சுகாதார அதிகாரிகளால் பணிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் தொடர்ச்சியாக கண்காணிப்பு நடவடிக்கைகள் மன்னார் பொது மருத்துவ அதிகாரிகள் பணிமனையால் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-56)

# டெங்குத் தொற்றாளர்கள் 25,055 பேர் அடையாளம்

கொழும்பு, ஜூன் 10


இந்த ஆண்டின் நேற்றுமுன்தினம் வரையான காலப்பகுதியில் நாட்டில் 25 ஆயிரத்து 55 டெங்குத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. அதேவேளை இந்தக் காலப்பகுதியில் டெங்குத் தொற்றால் 13 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிகளவான டெங்குத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்தகாலங்களில் நிலவிய மழையுடனான காலநிலையை அடுத்து நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துள்ளது என்று டெங்குக் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு 03 . 03 . 1939



உதிர்வு 08 . 06 . 2025

## இராசநாயகம் செல்வராசா
(பெயின்ரர் ஊமை)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசநாயகம் செல்வராசா அவர்கள் நேற்று முன்தினம் (08.06.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (11.06.2025) புதன்கிழமை மதியம் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 01.00 மணியளவில் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

2/2 மருதடி லேன்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்
076 441 8045
076 669 5397

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 18 . 05 . 1950



விண்ணில் 23 . 05 . 2024

## வெள்ளையன் சுப்பிரமணியம்

எங்கள் குடும்பத்தின் ஆணிவேரே!
என்றென்றும் எங்களுடன் இணைந்திருப்பீர்கள்
என எண்ணிலாக் கனவுகள் கண்டிருந்தோம்!
இடை நடுவில் எம்மைத் தவிக்கவிட்டு
ஏன் அப்பா மறைந்து விட்டீர்கள்.
காலன் உங்களைக் காலத்தால் அழைத்த வேளை
அத்துன்பத்தை ஏற்றுக்கொள்ள எம் மனதால் முடியவில்லை
விதி செய்த சதிதானோ என்று எம் மனது எண்ணினாலும்
எம் இதயங்களில் என்றும் நீங்கள் குடியிருப்பீர்கள்.
எம் வாழ்வு உள்ளவரை நிழலாய் நீங்கள் தொடர்வீர்கள்
கல்லறை வாழ்வில் ஓராண்டு சென்றாலும்
எங்கள் நெஞ்சறைக் கூட்டில் அழியாத ஓவியம் நீங்கள்
இன்னொரு பிறப்பு உண்மையென்றால்
அப்போதும் நீங்களே எங்கள் அப்பாவாக வரவேண்டும்...
என்ற வரத்தையே இறைஞ்சுகின்றோம்!

பொன் நாகமணி வீதி
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(CS 58521) E-1

என்றும் நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 03 . 1976



மறைவு 08 . 06 . 2025

## தவகெங்கன் சுசாந்தி

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், சூராவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தவகெங்கன் சுசாந்தி அவர்கள் கடந்த (08.06.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தேவராசா - தனலக்சுமி தம்பதியரின் அன்பு மகளும், அழகுரத்தினம் காலஞ்சென்ற பாலசிங்கம் அவர்களின் அன்பு மருமகளும், தவகெங்கன் அவர்களின் அன்பு மனைவியும், அபிஜந் அவர்களின் அன்பு தாயாரும், நிசாந்தி, சர்மிலன்ராஜ், தனுசா, சுஷாமா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுஜிதா, ரமேஸ், ரஜீவன் சிவகெங்கன், ஜெயகெங்கன், பாபுகெங்கன், சிவகெங்கேஸ்வரி, மதிகெங்கேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2025) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்
தவகெங்கன் - அபியந்
077 286 5350

(CS/58531) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 01 . 1930



மறைவு 07 . 06 . 2025

## திருமதி நேசமணி பாலசிங்கம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் டென்மார்கை (Denmark) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசமணி பாலசிங்கம் அவர்கள் கடந்த 07.06.2025 சனிக்கிழமை காலமானார். அன்னார் உடையார் திருமதி சின்னத்தம்பி சிவக்கொளுந்து அவர்களின் அன்பு மகளும், அம்பிகா (Denmark), காங்கேயன் (Denmark), அனுசூயா (Canada), பாலினி (Germany) அவர்களின் அன்புத்தாயும் சுரேந்திரராஜா (Denmark), நிசாந்தினி (Denmark), எழில்வண்ணன் (Canada), இராஜகுமாரன் (Germany) ஆகியோரின் அன்பு மாமியும், தர்ஷன், தாட்சாயணி, வைஷாலி, கிஷாலி, மீனா (Denmark), கோபி (London) சாகித்தியா, திவிஷ்வா (Canada), சிந்துஜன், சரண், காவியம் (Germany) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், செலினா, மீரா, மெல்வின், கௌலினா (Denmark) ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
சுரேந்திரராஜா மருமகன் (Denmark)
+4593896304, 004548444625
காங்கேயன் மகன் (Denmark) 004574850626.
அனுசூயா மகள் (Canada) 0014165599292
இராஜகுமாரன் மருமகன் (Germany) 004917662710361


(CS 58521) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 10 . 1943

மறைவு 09 . 06 . 2025



### அரியரத்தினம் சிவகுருநாதன்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அரியரத்தினம் சிவகுருநாதன் அவர்கள் நேற்று (09.06.2025) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அரியரத்தினம்-குட்டிப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும், துரைச்சாமி-நல்லம்மா தம்பதியின் மருமகனும் பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் சிறீக்காந்தன் (ஜேர்மன்), சிறீதரன் (லண்டன்), சிறீக்குமார் (அவுஸ்திரேலியா), சிறீறங்கன் (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆசிரியர்), பிறேமதிலி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயகுமாரி (ஜேர்மனி), டில்ருக்ஷா (லண்டன்), சுரேஸா (அவுஸ்ரேலியா), சியாமளா (ஆசிரியை, மாநகரசபை முன்பள்ளி, நல்லூர்), சதீஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் ஶ்ரீபைரவி, ஆதீபன் (ஜேர்மனி), கிருத்திகா, சானுகா (லண்டன்), யுவன், தனுஜன், இனியன் (அவுஸ்திரேலியா), தேனுஜன், சஹானா, நேருஜன் (உரும்பிராய்), தேனிகா, கேதனா, யாதனா (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் தனபாலசிங்கம், காலஞ்சென்றவர்களான பூமணி (ரத்தினம்மா), பாலசிங்கம், செல்வரத்தினம், கனகரத்தினம், திருநாவுக்கரசு ஆகியோரின் பாசமிகு சகோதரரும் மனோன்மணி, யோகமணி, புவனேஸ்வரி, கந்தசுவாமி, தங்கவேலு, நடராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2025) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கற்புலம் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்

*மன்னாரில்*

## பெண்களின் சாவுக்கு நீதிகோரியவர்கள் கைது

மன்னார், ஜூன் 10

மன்னார் பொது மருத்துவமனையில் இடம்பெற்ற மகப்பேற்று சிகிச்சைகளின்போது உயிரிழந்த சிந்துஜா மற்றும் பட்டித்தோட்டத்தைச் சேர்ந்த வேணுஜா மற்றும் அவரின் சிசு ஆகியோருக்கு நீதிகோரி போராடியவர்களில் மூவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சட்டவிரோதமாக பொதுமக்களை ஒன்றுகூட்டியமை மற்றும் பொதுச்சொத்துகளை சேதப்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின்கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கடந்த டிசெம்பர் மாதம் மன்னார் பொது மருத்துவமனைக்கு முன்பாக ஒன்றுகூடிய பொது மக்கள் மன்னார் பொது மருத்துவமனையில் இடம்பெறும் பல்வேறு சீர்கேடுகளுக்கு எதிராகப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

போராட்டக்காரர்களின் கோரிக்கை தொடர்பில் பல்வேறு வாக்குறுதிகள் அதிகாரிகளால் வழங்கப்பட்டபோதிலும் அதை ஏற்கமறுத்த சில போராட்டக்காரர்களால் போராட்டம் வன்முறையாக மாற்றமடைந்தது. எனினும் இறுதியில் சுமுகமான நிலையில் போராட்டம் நிறைவடைந்தது. இந்நிலையில் பல மாதங்கள் கழிந்த நிலையில் தற்போது மன்னார் பொலிஸார் குறித்த மூவரையும் கைது செய்துள்ளனர். (ச-56-60)


### பெயர்மாற்றம்

சோலை பல்லவராயன்கட்டு என்ற முகவரியை வதிவிடமாககொண்ட விஜயகீரன் மிக்காந் (NIC - 20090230056) என்ற பெயருடைய நான் இன்று முதல் விஜயகீரன் சிறிக்காந் எனப் பெயர்மாற்றம் செய்கின்றேன்.

விஜயகீரன் சிறிக்காந்

### சமையலாளர் தேவை (Chef)

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள Sabari Hotel and Restaurant P.V.T ற்கு (சைவம், அசைவம்)

சமையலாளர் தேவை (Chef)
(சம்பளம்-100,000 +)

sabari@sabarihotel.com

0094 7777 19555 (Whats App)
077 382 0798


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 16.05.2025 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் ஞானமுத்து கண்மலர்



அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் 13.06.2025 வெள்ளிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் எதிர்வரும் 15.06.2025 ஞாயிற்றுக்கிழமை பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் மதிய போசன நிகழ்வும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மலர்வு 03.12.1946

உதிர்வு 16.05.2025

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

(CS 58526) E-1

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கலைவிழா

புங்குடுதீவு திருநாவுக்கரசு கலை இலக்கிய மன்றத்தின் கலைவிழாவும் பனைசார் உற்பத்திப் பொருள்களின் காட்சிப்படுத்தலும் கலைமன்ற மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.


மன்றத் தலைவர் பொ.யமுனாதேவி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வேலணை பிரதேச செயலர் க.சிவகரன் கலந்துகொள்ளவுள்ளார்.

(ம25,9)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 . 11 . 1930

மறைவு 22 . 05 . 2024



**அமரர் சின்னப்பு ஆறுமுகம்**

ஆண்டொன்று ஆனாலும்
அழுது புரண்டாலும்
மீண்டு நீர் வருவீரோ
வருடங்கள் ஒன்றானதுவோ
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை
நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள் ஐயா
நீங்கள் கட்டிய சாம்ராஜயம் இங்கிருக்க
எம்மை நீர் தவிக்க விட்டு போனதென்ன?
நித்தமும் புலம்புகின்றோம்
ஆறவில்லை எங்கள் துயர்
நூறாண்டு போனாலும் நீங்காது உம் நினைவு.
ஐயா.... உங்கள் நினைவலைகள் என்றும் எம் நெஞ்சினில்
நீங்காமல் நிலைத்திருக்கும்....
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## புதிய மாடித் தொகுதி வாடகைக்கு


யாழ்ப்பாணம் K.K.S வீதியை முகப்பாக கொண்டு மருதனார்மடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட முதலாம், இரண்டாம் மாடியில் (first and Second Floor) அமைந்துள்ள அறைத்தொகுதிகள் மொத்தமாக வாடகைக்கு கொடுக்கப்படும்.

இரண்டு மாடிகளும் நவீன வசதிகளுடன் கூடிய Rooms With Attach Bathrooms, Hall, Kitchen கொண்டவை

வாகனத் தரிப்பிட வசதி உள்ளது.

Hotel, Guest House நடாத்த உகந்த இடம்

தொடர்பு: 076 124 1537
077 017 9041
077 116 3338



## பணியாளர் தேவை

அரச அங்கிகாரம்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றின் ஆயுள்வேத உற்பத்தி மருந்துகள் (அபைக்சோரா) கம்பனியின் மருந்து வகைகளை விற்பனை செய்யக்கூடிய நிதந்தர பணியாளர்கள் தேவைப்படுகின்றனர் வியாபார அனுபவமுள்ளவர்கள் 22 தொடக்கம் 50 வயதிற்குற்பட்ட ஆண், பெண் இருபாலரும் தேவைபடுகின்றனர் எனவே மோட்டார் சைக்கிள் மற்றும் அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

+94 076 305 5786
+94 074 152 0536

இவ் இணைப்பானது தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**கம்பனி முகாமையாளர்**

(CS 58528) E-1

## மரண அறிவித்தல்

மலர்வு 06 . 03 . 1957

மறைவு 09 . 06 . 2025



**திருமதி ஜெகதீஸ்வரசர்மா புவனேஸ்வரி**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

நவிண்டில் சக்கலாவத்தையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகதீஸ்வரசர்மா புவனேஸ்வரி அவர்கள் நேற்று (09.06.2025) திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் கல்யாணசுந்தரகுருக்கள்-பட்டம்மா தம்பதியின் அன்பு மகளும், சர்வேஸ்வரசர்மா-ஜானகி தம்பதியின் அன்பு மருமகளும், ஜெகதீஸ்வரசர்மா அவர்களின் அன்பு மனைவியும், ஹம்ஸவதி (வாத்திய இசைத்துறை விரிவுரையாளர்-யாழ் பல்கலைக்கழகம்), லாவண்யா ஆகியோரின் அன்புத் தாயாரும் கணநாதசர்மாவின் மாமியாரும் ஸ்ருதிலயா, ஸ்வரலயா ஆகியோரின் பேரத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் எள்ளங்குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 02 . 1951

மறைவு 31 . 05 . 2025



**வைரவநாதன் துரைராசா**

எழுதுமட்டுவாள் வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட வைரவநாதன் துரைராசா அவர்கள் கடந்த (31.05.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவநாதன்-நவமணிப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும் நாகபூசணி அவர்களின் அன்புக் கணவரும், நெல்சன், துஸ்யந்தன் (பிரான்ஸ்), ஜினோதினி, வசந்தினி, காலஞ்சென்ற யதுசன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சிதம்பரநாதன், மகேஸ்வரி, இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, சிவராசா, சிவயோகநாதன், காலஞ்சென்ற செல்வராசா மற்றும் கமலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (11.06.2025) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பிரான்சில் நடைபெறும் (இலங்கை நேரப்படி பிற்பகல் 02.00 மணிக்கு நடைபெறும்)

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 971 8397

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க செயற்கை நுண்ணறிவின் உதவி

கொழும்பு. ஜூன் 10

குற்றவாளிகளை அடையாளம் காண ஏ.ஐ. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அவர்களின் முகப்படங்களை உருவாக்கும் திட்டம் வெற்றியளித்துள்ளதாக கொழும்பு குற்றப்பிரிவு இயக்குநர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ருவன் குமார தெரிவித்துள்ளார். ஏ.ஐ. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி குற்றவாளிகளின் விளக்கங்களின் அடிப்படையில் குற்றப்பிரிவுக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட படங்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை ஏ.ஐ. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி குற்றவாளிகளின் 5 படங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அந்தப் படங்களின் அடிப்படையில் இரண்டு குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ச-இ)

# நெல்லுக்கு நிர்ணய விலையை உரியநேரத்தில் நிர்ணயியுங்கள்

## விவசாயிகள் கோரிக்கை



**கிளிநொச்சி, ஜூன் 10**

**நெல்லுக்கான நிர்ணய விலை உரியகாலத்தில் நிர்ணயிக்கப்படுவதில்லை. இதன்காரணமாக அறுவடைசெய்த நெல்லை விற்பனை செய்யமுடியாத நிலையில் இடைத்தரகர்களுக்கு விற்பனை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

2025 ஆம் ஆண்டுக்கான சிறுபோக அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரமந்தனாறு நீர்ப்பாசனக் குளத்தின்கீழ் சிறுபோக நெற்செய்கை 175 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டு தற்பொழுது அறுவடை நடைபெற்றுவருகின்றது.

இம்முறையும் பல தடவைகள் கிருமிநாசினி விசிறப்பட்டிருந்தபோதிலும் உரிய விளைச்சலைப் பெறமுடியாத நிலை தோன்றியுள்ளது.

அத்துடன் அரசாங்கத்தினால் உரிய காலத்தில் நெல்லுக்கான நிர்ணய விலை விவசாயிகளுக்கு ஏற்றவகையில் உரிய காலத்தில் நிர்ணயிக்கப்படுவதில்லை.

இதன் காரணமாக விவசாயிகள் அறுவடைசெய்த நெல்லை விற்பனைசெய்யமுடியாத நிலையில் இடைத்தரகர்களுக்கு விற்பனை செய்யவேண்டிய நிலை உருவாகுகின்றது.

தற்போதைய அரசாங்கமாவது விவசாயிகளின் நலனைக் கருத்திற்கொண்டு உரிய நேரத்தில் நெல்லுக்கான விலையை நிர்ணயிக்கவேண்டும் - என்றனர்.

(ச-113)

## வடக்கில் கனமழை

கொழும்பு, ஜூன் 10

வடமாகாணத்தில் பிற்பகல் அல்லது இரவுவேளைகளில் இடியுடன் கனமழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

நாட்டின் தென்மேற்குப் பிராந்தியத்தில் ஜூன் மாதம் 10ஆம் திகதிமுதல் (இன்று) மழையுடனான காலநிலை அதிகரித்துக் காணப்படும். அத்துடன், நாட்டைச் சூழவுள்ள கடற்பகுதிகளில் கடும் காற்று வீசக்கூடும். வடக்கு மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களில் பிற்பகல் அல்லது இரவுவேளைகளில் மழை அல்லது இடியுடன்கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது. மன்னார் தொடக்கம் காங்கேசன்துறை ஊடாக முல்லைத்தீவு வரையான கடல் பிராந்தியங்களின் சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன்கூடிய மழை பெய்யக்கூடும் - என்றுள்ளது.

(ம-இ)

## ட்ரம்பின் பயணத்தடை நேற்றுமுதல் நடைமுறை

நியூயோர்க், ஜூன் 10

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்த 12 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கான பயணத் தடை நேற்றுமுதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

ஆப்கானிஸ்தான், மியன்மார், சாட், கொங்கோ, கினியா, எரிட்ரியா, ஹைட்டி, ஈரான், லிபியா, சோமாலியா, சூடான் மற்றும் ஏமன் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் புருண்டி, கியூபா, லாவோஸ், சியரா லியோன், டோங்கா, துர்க்மெனிஸ்தான் மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு பகுதிப் பயணத்தடைவிதிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

(எ-இ)

### வீடொன்றில்...

பட்டுள்ளதுடன், சந்தேகநபராக ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களின் அடிப்படையில் வவுனியா, கதிரவேல் பூவரசங்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே மேற்படி கஞ்சா கைப்பற்றப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் 45 வயதுடையவர் என்றும், அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ-ம-110)

### ரணிலைத்...

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவால், தரமற்ற தடுப்பூசிகள் இறக்குமதி செய்யப்பட்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகவே அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகவுள்ளார்.

(அ-ம-இ)

### கம்மன்பிலவுக்கு...

றன. இவ்வாறான கருத்துகளை வெளியிட்டவர்களிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணைகளை முன்னெடுத்து, வாக்குமூலத்தைப் பதிவு செய்து வருகின்றனர். இவ்வாறான பின்னணியிலேயே, முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவிடம் நேற்று நான்கு மணிநேர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

(அ-ம-இ)

### சிறைச்சாலை...

தீர்மானித்துள்ளது. ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு மோசடியாகப் பயன்படுத்தப்பட்ட விடயத்துக்காகவே, அவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பணியிடை நீக்கம் செய்யும் முடிவும் எடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்று மாலை அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இதன்போது இந்த விடயம் தொடர்பில் நீண்டநேரம் விவாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், கடந்த காலங்களில் இவ்வாறு பலர் விடுவிக்கப்பட்டிருக்க வாய்ப்புள்ளதால், பரந்துபட்ட விசாரணைகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ-ம-44)

### அநுராதபுரம்...

வைக்கப்பட்டுள்ளார். வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் நாடெங்கிலும் உள்ள பல்வேறு சிறைச்சாலைகளிலும் இருந்து பலர் விடுவிக்கப்பட்டனர். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதியொருவர் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டிருந்தார். இந்த விடயம் நாடளாவிய ரீதியில் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய அநுராதபுரம் சிறைச்சாலையின் கண்காணிப்பாளர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

(அ-ம-இ)

### மாணவர்கள்...

இரவு நடமாடிய மூன்று சிறுவர்கள் மீது சந்தேகமடைந்த பொலிஸார், அவர்களை சட்டமருத்துவ அதிகாரியின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதன்போது, அந்த மூவரும் போதை மாத்திரைகளைப் பயன்படுத்தியமை தெரியவந்துள்ளது. இதையடுத்தே, அவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய சிறுவர் நன்னடத்தைப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். அத்துடன், சிறுவர்களுக்குப் போதைமாத்திரைகளை விற்பனைசெய்த நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

(அ-ம-26)

### வாள்வெட்டு...

பிரதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அவரிடம் இருந்து வாளொன்றும் மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், அவரைச் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தும் நகர்வுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(அ-ம-26)

### தையிட்டி...

பௌர்ணமி தினமான இன்று தையிட்டி திஸ்ஸ விகாரையில் பொசன் வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. இதைமுன்னிட்டு பெருமளவான மக்கள் நேற்றும் வழிபாடுகளில் ஈடுபட்ட நிலையில், அதன் தொடர்ச்சியாக இன்றும் பேருந்துகளில் மக்களை அழைத்துவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணியின் உரிமையாளர்கள், விகாரையை அகற்றிவிட்டு காணியைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி திஸ்ஸ விகாரைக்கு முன்பாக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இன்றும் இந்தப் போராட்டங்கள் இடம்பெறவுள்ளன. இதனால், பிறிதொரு பாதையூடாக அவர்களை அழைத்துவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அறிய முடிகின்றது.

திஸ்ஸ விகாரையில் இடம்பெறும் பொசன் வழிபாடுகளுக்காக, ஆயிரக்கணக்கான சிங்கள மக்களைக் கொண்டு வருவதற்கு சில சிங்கள கடும்போக்குச் செயற்பாட்டாளர்கள் அண்மைக்காலமாக தீவிரமாக இயங்கிவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மனிதாபிமானப் பொருள்களுடன் சென்ற

# மட்லீன் கப்பலைக் கைப்பற்றி பயணத்தைத் தடுத்தது இஸ்ரேல்

நியூயோர்க், ஜூன் 10

காஸாவை நோக்கி மனிதாபிமானப் பொருள்களுடன் சூழல் ஆர்வலர் கிரெட்டா தன்பேர்க் பயணித்துக்கொண்டிருந்த மட்லீன் கப்பலுக்குள் இஸ்ரேலிய படையினர் பலவந்தமாக நுழைந்து அந்தக் கப்பலை இஸ்ரேல் நோக்கிக் கொண்டுசெல்கின்றனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சு இதை உறுதிப்படுத்தியுள்ளது. கப்பலைப் பாதுகாப்பாக இஸ்ரேலுக்குக் கொண்டுசெல்கின்றோம். அதில் உள்ளவர்கள் அவர்களின் நாட்டுக்குப் பாதுகாப்பாக அனுப்பிவைக்கப்படுவார்கள் என இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

காஸாவில் மக்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர். உணவின்றி மக்கள் உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இந்தநிலையில், சூழல் ஆர்வலர் கிரெட்டா தன்பேர்க் காஸாவுக்கான மனிதாபிமானப் பொருள்களுடன் கப்பல் பயணத்தை ஆரம்பித்திருந்தார். இந்தப் பயணத்தை ஆரம்பிக்கும்போது, இதற்கு முன்னர் இவ்வாறான முயற்சியில் ஈடுபட்ட கப்பல்கள் எதிர்கொண்ட ஆபத்துகளை வன்முறைகளை தாக்குதல்களை நாங்கள் அறிவோம். நாங்கள் எதிர்கொள்ளும் ஆபத்துகள் எவையையும் காஸாவில் உயிர்பிழைத்து வாழ்வதற்காக பாலஸ்தீனியர்கள் எதிர்கொள்ளும் ஆபத்துகளுடன் ஒப்பிடவேமுடியாது. எங்களுடைய நோக்கம் காஸாவுக்குச் சென்று எங்களிடம் உள்ள மனிதாபிமானப் பொருள்களை ஒப்படைப்பதே என்று தெரிவித்திருந்தார். (எ-இ)



## சீனாவின் ஏற்றுமதி வளர்ச்சியில் வீழ்ச்சி

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்த வரிகளைத் தொடர்ந்து அமெரிக்காவுக்கான ஏற்றுமதி குறைந்ததால் கடந்த மே மாதத்தில் சீனாவின் ஏற்றுமதி வளர்ச்சிகுறைந்துள்ளது.

நேற்று வெளியிடப்பட்ட சுங்கத் தரவுகளின்படி, சீனாவின் ஏற்றுமதிகள் ஆண்டுக்கு ஆண்டு 4.8 வீதம் உயர்ந்தாலும், கடந்த ஏப்ரல் மாதத்தில் 8.1 வீதத்தால் குறைந்துள்ளது. இதேவேளை அமெரிக்காவுக்கான ஏற்றுமதி மாதத்துக்கு மாதம் கிட்டத்தட்ட 12 வீதம் குறைந்துள்ளது. (எ-இ)



## பதவிப்பிரமாணம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

2025 உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தமிழ்மக்கள் கூட்டணி சார்பாகப் போட்டியிட்டு உறுப்பினர்களாகத் தெரிவானவர்களுக்கான சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் அறிவாலய மண்டபத்தில் கட்சியின் உபசெயலாளர் வி. மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது அடுத்தகட்ட அரசியல் நகர்வுக்கான கலந்துரையாடலும் நடைபெற்றது. (ச-66)

# இஸ்ரேல் துப்பாக்கிச்சூட்டில் பலஸ்தீனியர்கள் உயிரிழப்பு

காஸா, ஜூன் 10

காஸாவில் உணவுப்பொருள் விநியோக மையத்தைநோக்கிச் சென்றுகொண்டிருந்த 5 பலஸ்தீனர்களை இஸ்ரேல் படையினர் நேற்றுமுன்தினம் சுட்டுக்கொன்றுள்ளனர் என்று பலஸ்தீன சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தங்கள் படைகளை நோக்கி முன்னேறிவந்த சிலரை எச்சரிக்கும் வகையில் தற்காப்புக்காக துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது என்று இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதேவேளை, கடந்த செவ்வாய்க்கிழமை அந்த விநியோக மையத்துக்கு அருகே சென்ற பலஸ்தீனர்களில் சிலரை நோக்கி இஸ்ரேல் இராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 27 பேர் உயிரிழந்தனர். கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 80 பலஸ்தீனர்களை இஸ்ரேல் சுட்டுக்கொன்றுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

**வேலையாட்கள் தேவை**

சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்புவோர், ஆண், பெண் இருபாலரும் தேவை (சுன்னாகத்தை அண்மித்தோர் விரும்பத்தக்கது) சம்பளம் நேரில் பேசி தீர்மாணிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 076 632 3554

**விற்பனைக்கு**

Car, Wagon-R (2016), 2017 ல் பதிவானது CAV - இலக்கம் 160000Km, Purple நிறம். புதிய ரயர் பற்றறி Service Recovds உண்டு. (பின்பக்க signal Light சிறியது சேதம்). விலை - 64,50000.00 யாழ்ப்பாணத்திலும் பார்வையிடலாம்.

(CR/45102) J-1

தொடர்பு:- 070 347 0706

**வீடு வாடகைக்கு**

யாழ்.நகரிலிருந்து 4km தூரத்தில் அமைந்த விசாலமான வீடு வாடகைக்கு விடப்படும். குறுகிய கால அடிப்படையில் நிறுவன ஊழியர்கள், மாணவர்கள், வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் தங்குவதற்கு தளபாட வசதிகளும் உள்ளன. நிறுவன களஞ்சிய பாவனைக்கும் உகந்தது.

தொடர்புகளுக்கு -: 0759799161

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ் வீதி ஆனைக்கோட்டையில் 6 பரப்புடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்களுக்கு மட்டும்) 3 அறைகள், 2 வரவேற்பு அறைகள், சமையல் அறை, குளியல் அறை, வாகனத்தரிப்பிடம் போன்ற வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு

தொடர்பு:- 077 651 2037

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் பின்வரும் வேலையாட்கள் தேவை.

- சமையலாளர் - காலை 6.30 - மாலை 5.00 மணிவரை சம்பளம் நாள் ஒன்றிற்கு 2000/- (துப்பரவு, நம்பிக்கை, நேர்மையுள்ளவர் விரும்பத்தக்கது.)
- வயோதிபப் பெண் மற்றும் ஆணை தங்கியிருந்து

**வேலையாட்கள் தேவை**

யாழ் பஸ் நிலையத்தில் அமைந்துள்ள பிரபல புத்தகசாலைக்கு வேலைக்கு ஆண்/ பெண் இருபாலரும் தேவை. சுயவிபரங்களுடன் நேரில் சமூகம் தரவும்.

தொடர்பு:- 077 964 7256

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ் இராசாவின் தோட்ட வீதியில் வீடு வாடகைக்கு உண்டு.

077 372 8081

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org